கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 214/2018

பிரதிவாதி தரப்பு சாட்சி-2 பரமேஸ்வரன் **திருமதி.ஏ.பிரேமா** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 04.12.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. இந்த வழக்கில் 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு சேர்த்து முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்து தன்னுடையது என வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் சொத்து எந்த சர்வே எண், என்ன விஸ்தீரணம் போன்ற விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். பழைய சர்வே எண்.136, புதிய T.S.No..3/2 ஆகும். பழைய சர்வே எண் என்பது நத்தம் சர்வே எண் என்றால் சரிதான். மேற்படி நத்தம் சர்வே எண் யார் பெயரில் இருந்தது என்றால் சர்க்கார் புறம்போக்கு என்று இருந்தது. சர்வே எண்.136 என்பது சர்க்கார் புறம்போக்கா அல்லது நத்தம் நிலமா என்றால் குடியிருப்பு பகுதி மட்டும் நத்தம் நிலமாக மாற்றப்பட்டுள்ளது.

2. சர்வே எண்.136 ல் குடியிருப்புகள் இருந்தது என்றால் சரிதான். சர்வே எண்.136 என்பது நத்தம் நிலமாக மாற்றப்பட்டபோது தீர்மானத்தின் அடிப்படையில் மாற்றப்பட்டதா என்றால் சர்வே எண்.136 என்பது நத்தமாக இருந்து டிவுன் சர்வேயாக மாற்றப்பட்டதும் அந்த சமயத்தில் எந்த வகையாக நடைமுறை மேற்கொள்ளப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியவில்லை. உயர் அதிகாரிகளை கேட்டு தான் சொல்ல முடியும். சாட்சி மீண்டும் நத்தம் வகைபாடு குறித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கும் என்று கூறுகிறார். அந்த அரசாணை எங்கள் அலுவலகத்தில் இருக்கும் என்றால் சரிதான். அதை தாக்கல் செய்கிறேனா என்றால் செய்கிறேன்.

**வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
**Kulithalai.**